பிடிக்க கூடாது என்ற ஒரு சட்டத்தை இயற்றி இருக்கிறார்கள். அதனால்தான் இந்தப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அப்படி ஒரு சட்டம் இயற்றுவது சரியா, முறையா, செல்லுமா என்பதெல்லாம் சட்டத்துறை மூலமாக ஆலோசிக்க வேண்டிய ஒன்று. எங்களுக்குத் தெரிந்தமட்டில் அப்படி சட்டம் இயற்றுவது சரியல்ல, செல்லாது என்பதுதான். அந்தந்த மாநிலமே அந்த மாநிலத்தின் எல்லைக்கு உட்பட்டவைகளைத் தனித்தனியாக வைத்துக்கொள்வது என்று சொன்னால் அது மாநிலமாக இருக்காது; தனி நாடாகத்தான் ஆக வேண்டும். கேரளம் தனி நாடு அல்ல. இந்தியாவில் ஒரு மாநிலம். அப்படி ஒரு சட்டம் இயற்றி இருப்பது சரியல்ல என்பது நம்முடைய வாதம். அரசு மாறினாலும், அதனுடைய வாதம் மாறாது. நிச்சயம் அதை அரசு வற்புறுத்தும்.

(முற்பகல் 11-50)

(ஔ) பழனித் தொகுதி நெய்க்காரப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்டுதல்.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "பழனி தொகுதி, நெய்க்காரப் பட்டி பேரூராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம் கட்டும் பணி இதுவரை தொடங்கப்படாதது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் பின்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

அரசின் கொள்கைப்படி ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்குவதற்கு தேவையான கட்டிடங்கள் கட்டுவதற்கு 5 ஏக்கர் பரப்புள்ள நிலமும், ரூ. 10,000மும் நன்கொடையும் பொது மக்களிடமிருந்து அரசுக்கு கிடைக்கப் பெறவேண்டும். 1985-86 ஆம் ஆண்டு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட 20 கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களுள் அண்ணா மாவட்டத்தைச் சார்ந்த நெய்க்காரன் பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார

1987 ஏப்ரல் 22] [திரு. ப. உ. சண்முகம்]

நிலையம் கட்டுவதற்கு நன்கொடையாக கிடைக்க வேண்டிய 5 ஏக்கர் நிலத்திற்கு பதில் அந்நிலையம் கட்டுவதற்காக 2.80 ஏக்கர் நிலம் மட்டும் இலவசமாக தருவதற்கு திரு. பி. ஆர். குருசாமி நாயக்கர், ரேணுகா உயர் தொடக்கப்பள்ளி தாளாளர் அவர்கள் முன் வந்துள்ளார்கள். நிலத்திற்கு நிலவும் உயர்விலை, சூழ்நிலை இவற்றை உத்தேசித்து, அங்கு இப்பொழுது கிடைக்கப் பெற்ற 2.80 ஏக்கர் நிலத்திலேயே செங்குத்தான வடிவமைப்புக் கொண்ட பல மாடிக் கட்டடங்கள் கட்டலாம் என்று பரிந்துரைத்து ஒரு செயற்குறிப்பு ஆரம்ப சுகாதார இயக்குநர் அவர்களிடமிருந்து ஏப்ரல் 1987-ல் அரசுக்கு வரப்பெற்று, அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

அரசின் கொள்கைப்படி பொது மக்களிடமிருந்து ரூ. 10,000 நன்கொடையாக கிடைக்கப் பெறவேண்டிய தொகை இன்னும் பெறப்படவில்லை. இந்த நன்கொடை தொகை கிடைக்கப் பெற்றதும் வருகின்ற ஆண்டுகளில் நிதி வசதியைப் பொறுத்து பழனி தொகுதி நெய்க்காரன்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டடம் கட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 5 ஏக்கர் நிலமும் 10 ஆயிரம் ரூபாயும் அரசுக்கு கொடுக்க வேண்டும் என்பது அரசினுடைய கொள்கை. அதை நாங்களும் அறிந்து இருக்கிறோம். ஆகவேதான் இந்த ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க வேண்டி குருசாமி நாயக்கர் என்பவர் 2 ஏக்கர் 80 செண்ட் நிலத்தையும் அதற்கான 10 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையையும் அமைச்சருடைய கரங்களில் அன்றைக்குக் கொடுத்து அவர்களும் அமைச்சரோடு இருந்து போட்டா எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அவரையும் அமைச்சர் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். எனவே பணம் 10 ஆயிரம் வரவில்லை என்று இந்த அறிக்கையில் கூறப்பட்டு இருக்கிறது. இது உண்மையா? இது மிகவும் அதிர்ச்சி தரக்கூடிய விஷயமாக இருக்கிறது. இது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னிடத்தில் கொடுக்கப் பட்டுள்ள குறிப்பில் பணம் வரவில்லை என்று இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவதை வைத்துக் கொண்டு விசாரித்துச் சொல்லுகிறேன். தவறு இருந்தால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

(அஅ) நாகை மருத்துவமனைக்குப் புதிய நோயாளி ஊர்தி.

மாண்மிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் கோ. வீரய்யன் மற்றும் எம். செல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், நாகை மருத்துவ மனையில் 5—5—1985 முதல் ஆம்புலன்ஸ் இல்லாததால் அப்பகுதியில் திடீர் பாதிப்புகள் ஏற்படும் போது பாதிக்கப் பட்டவர்களை மருத்துவமனைக்கு கொண்டு வருவதற்கு ஏற்படும் இன்னல்கள் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்மிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மகிழத் தக்க அளவுக்கு பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

தஞ்சை மாவட்டம், நாணகப்பட்டினம் அரசு தலைமையிட மருத்துவமனையிலிருந்து ஒரு பழைய ஊர்திக்கு பதிலாக, ஒரு புதிய ஊர்தி தமிழ்நாடு சுகாதாரப் போக்குவரத்து துறை இயக்குநரால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த புதிய நோயாளி ஊர்தி தஞ்சாவூர் மாவட்ட காசநோய் அலுவலர் மூலமாக மாவட்ட மருத்துவ அலுவலர் நாகப்பட்டினத்திற்கு கொடுக்கப்படுகிறது. மேலும், "விபத்து மற்றும் அவசர சிகிச்சை பணியின்" கீழ் நாகப்பட்டிணம் அரசு தலைமையிட மருத்துவமனைக்கு இரு நோயாளி ஊர்திகள் (Ambulance vans) வாங்கவும், எரிபொருள், பராமரிப்பு, மருந்து போன்ற